Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY NOVEMBER 2, 2023

வியாழக்கிழமை நவம்பர் 02, 2023 | ஒளி: 09 கதிர் 119 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# கேள்வி அதிகரிப்பு

நாட்டில் செவ்விளநீருக்கான கேள்வி சர்வதேச சந்தையில் வேகமாக அதிகரித்து வருவதுடன், 2023ஆம் ஆண்டில் செவ்விளநீரின் ஏற்றுமதி 117 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக இலங்கை தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர



தெங்கு அபிவிருத்தி சபை, இலங்கை தென்னை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தெங்கு அபிவிருத்தி

தொடர்ச்சி P2

## அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் தாக்குதல்

# 50 பேர் மரணம்



காசா எல்லைப் பகுதியின் வடக்கு பகுதியில் அமைக்கப்பட்டு இருந்த முகாம் ஒன்றில் நடத்தப்பட்ட தாக்குதலில் 50-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். மேலும் 150-க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். இஸ்ரேல் இந்த தாக்குதல் மூலம் அதிக குடியிருப்புகள் உள்ள பகுதியைக் குறி வைத்து இருக்கின்றது,' என ஹமாஸ் அமைப்பின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது

இந்த தாக்குதல் குறித்து வெளியான வீடியோவில் இடிந்து விழுந்த குடியிருப்பு பகுதிகளின் இடிபாடுகளில் இருந்து உயிரிழந்தோர் சடலங்கள் மீட்கப்படும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

மீட்புப் பணிகள் நடைபெறும் பகுதியில் பலர் ஒன்றுகூடி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். ஹமாஸ் தெரிவித்து இருக்கும் இந்த குற்றச்சாட்டு குறித்து இஸ்ரேல் தரப்பில் இதுவரை எந்த பதிலும் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பிக்குணி உட்பட அறுவர் கைது

சட்டவிரோத மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு எதிராக திவுலப்பிட்டிய நகர எல்லையில் இருந்து புதன்கிழமை (01) ஆரம்பிக்கப்பட்ட பேரணியை தடுத்து நிறுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்ததுடன், பிக்குணி உட்பட ஆறு பேரை கைது செய்துள்ளனர்.

சசுன ரகுமாவின் குளோபல் மன்றத்தின் அழைப்பாளர் பலாங்கொட காஷ்யப தேரர் மற்றும் மின்சார பாவனையாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க ஆகியோர் கைது செய்யப்பட்டவர்களில் அடங்குவர்.

தொடர்ச்சி P2



# 24 வலயங்களில் டெங்கு அபாயம்

நாடளாவிய ரீதியில் 24 வலயங்களில் டெங்கு அபாய நிலை காணப்படுவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பணிப்பாளர் டொக்டர் நளின் ஆரியரத்ன, நாடளாவிய ரீதியில் 68,116 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இந்த மாதத்தில் மட்டும் இதுவரை 3,631 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் கூறினார். கடந்த மாதம் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் இது கிட்டத்தட்ட ஆயிரத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அந்தப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

# "பஸ் கட்டணத்தை கூட்டுமாறு கோருவோம்"



எதுவித பகுப்பாய்வுகளையும் மேற்கொள்ளாமல் டீசலின் விலையை இரு தடவைகள் ரூ.15 ஆல் உயர்த்தியுள்ளமை சந்தேகத்திற்குரியது என அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# வடமாகாண மக்களின் வாழ்க்கைக்கு ஆதரவு

■ எஸ் தில்லைநாதன்

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு வடக்குக்கு வருகைதந்திருக்கும் உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் அன்னா பிஜெர்டே மற்றும் அவரது குழுவையும் பெண்கள், சிறுவர்கள் துறை சார்ந்த தலைவர்களையும் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் திங்கட்கிழமை (30) சந்தித்திருந்தார்.

தொடர்ச்சி P2



# 'நாம் 200' நிகழ்வு இன்று

## கௌரவ அதிதி சீதாராமன்

இந்திய வம்சாவளி மக்கள் இலங்கையில் குடியேறி 200 ஆண்டுகள் நிறைவடைவதை சிறப்பிக்கும் வகையில் 'நாம் 200' நிகழ்வு, கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில், இன்று (02) வியாழக்கிழமை, பிற்பகல் 4 மணிக்கு, அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெறவுள்ளது.

தொடர்ச்சி P2

# நியமன வழங்கல் ஒத்திவைப்பு

■ வி.ரி. சகாதேவராஜ

இலங்கை அதிபர் சேவை தரம் 3க்கு நியமனம் பெற்ற கிழக்கு மாகாணத்தை சேர்ந்த 486 புதிய அதிபர்களுக்கான நியமன கடிதங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# 62 பிரிவுகளில் மண்சரிவு அபாயம்

நாடளாவிய ரீதியில் தொடர்ந்தும் பலத்த மழை பெய்து வருவதால் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் 11 மாவட்டங்களில் உள்ள 62 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மண்சரிவு

தொடர்ச்சி P2



# ஷாப்டர் படுகொலை: நீதிமன்றம் தீர்ப்பு

ஜனசக்தி குழும வர்த்தகத்தின் பணிப்பாளரும் பிரபல தொழிலதிபருமான தினேஷ் ஷாப்டர் படுகொலைச் செய்யப்பட்டுள்ளார் என கொழும்பு மேலதிக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்த தீர்ப்பை நீதவான் ரஜீந்திரா ஜயசூரிய, புதன்கிழமை (01) வழங்கிவைத்தார்.

தொழிலதிபர் தினேஷ் ஷாப்டர் கழுத்து மற்றும் முகம் அழுத்தப்பட்டதன் காரணமாகவே உயிரிழக்க நேர்ந்ததாக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தொடர்ச்சி P2

# பொது போக்குவரத்தில் 'CCTV' பொருத்தவும்



பாடசாலைகள் மற்றும் பொதுப் போக்குவரத்து வாகனங்களில் CCTV கெமரா அமைப்புகளை பொருத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

# பெண்ணுடன் பறக்க முயன்ற கணவன் கைது

மனைவியின் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி மற்றுமொரு பெண்ணை இத்தாலிக்கு அழைத்துச் செல்ல முயன்ற கணவன், கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு அதிகாரிகளால், செவ்வாய்க்கிழமை (31) பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட இவர் தனது ஐந்து வயது மகன் மற்றும் அவரது மனைவி என நம்பப்படும் காங்கேசன்துறையைச் சேர்ந்த 29 வயதுடைய பெண்ணுடன் எயார் அரேபியா விமானத்தில் பயணம் செய்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு , செவ்வாய்க்கிழமை (31) பிற்பகல் 01.45 மணிக்கு வந்துள்ளார்.




அங்கு, குடும்பத்தினரின் ஆவணங்களை பரிசோதிப்பதற்காக, குடியேற்ற சாளரத்திற்கு வந்தபோது அவர்கள் மூவர் மீதும் சந்தேகம் ஏற்பட்டது. அவர்கள் மூவரும் எல்லை கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகளிடம் அனுப்பிவைக்கப்பட்டனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 'நாம் 200' நிகழ்வு இன்று

இதில், சிறப்பு அதிதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்பார். இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கௌரவ அதிதியாக பங்கேற்பார்.

இந்நிகழ்வில் பங்கேற்பதற்காக, 3 நாள் விஜயத்தை மேற்கொண்டு, இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், இலங்கையை புதன்கிழமை (01) காலை வந்தடைந்தார். அவரை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வரவேற்றனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இ.தொ.காவின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், இ.தொ.காவின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

# ஷாப்டர் படுகொலை: நீதிமன்றம் தீர்ப்பு

அதனடிப்படையில் இந்த படுகொலையுடன் சம்பந்தப்பட்ட நபர்களை உடனடியாக கைது செய்து நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்துமாறு கொழும்பு குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சிலரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் தினேஷ் ஷாப்டர் காயமடைந்த நிலையில், 2022 டிசெம்பர் 15 மாலை பொரளையில் மீட்கப்பட்டார். மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்ட போதிலும் அன்றே மரணமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வடமாகாண மக்களின் வாழ்க்கைக்கு ஆதரவு

வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை குறித்து உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கு ஆளுநர் தெரியப்படுத்தியதுடன், வடமாகாணத்தில் எவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளலாம் என்பதைக் கண்டறிவதில் பெரும் சவால்களை எதிர்கொள்வதாகவும், கல்வி, சுயதொழில் உட்கட்டமைப்பு மற்றும் சிறுவர், பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதில் வடக்கு மாகாணத்திற்கு ஆதரவளிக்குமாறும் உலக வங்கி பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொண்டார்.

இவற்றைக் கேட்டறிந்த உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர், இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் சமூக நிலைமை குறித்து தாம் மிகவும் கவனத்தில் கொள்வதாகவும் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு தொடர்பான திட்டங்களுக்கு தாம் கைகொடுப்பதாகவும் கூறியிருந்தார்.

வடமாகாணத்தின் கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு உலக வங்கி பூரண அனுசரணையை வழங்கும் எனவும் உலகவங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் இந்த கலந்துரையாடலில் தெரிவித்தார். இதன்படி, எதிர்காலத்தில் வடமாகாண மக்களின் வாழ்க்கையை மேலும் மேம்படுத்த உலக வங்கி பூரண ஆதரவை வழங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

# பிக்குணி உட்பட அறுவர் கைது

அந்த அமைப்புக்கள் மற்றும் தேசிய பிரஜைகள் ஆலோசகர் சங்கம் இணைந்து 'சட்டவிரோத மின்சார அதிகரிப்பு எதிரான நடைபயணம்' திவுலப்பிட்டி பஸ் நிலையத்துக்கு அருகில் காலை 8.40 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது.

அப்போது, ஒலிபெருக்கி மூலம் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேசிய நீர்கொழும்பு பொலிஸ் அத்தியட்சகர் பாலித அமரதுங்க, பேரணியால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் என்பதால், பேரணியை நிறுத்துமாறும் பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் கலைந்து செல்லுமாறும் உத்தரவிட்டார்.

அந்த உத்தரவை மீறி பேரணி ஆரம்பிக்கப்பட்டது. அதனையடுத்தே, இந்த அறுவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# கேள்வி அதிகரிப்பு

அதிகார சபையின் அதிகாரிகளுடன் இலங்கையில் தென்னை பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடினார்.

2022 ஆம் ஆண்டு 11 மில்லியன் செவ்விளநீர் ஏற்றுமதி செய்யப்பட்டு 110 மில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இவ்வருடம் இதுவரை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள செவ்விளநீரின் தொகை 14 மில்லியன் எனவும் இதன் மூலம் கிடைத்த வருமானம் 140 மில்லியன் ரூபாய் எனவும் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

# கணக்கெடுப்பு ஆரம்பம்



பத்து வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு, புதன்கிழமை (01) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் முதல் கணக்கெடுப்பு ஜனாதிபதி செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கணக்கெடுப்பில் பதிவு செய்யப்பட்ட முதலாவது கட்டிடமாக ஜனாதிபதி செயலகம் பட்டியலிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு குடிசன மதிப்பீட்டில் தரவு சேகரிப்புக்கு அச்சிடப்பட்ட ஆவணங்களுடன் டெப்லெட் கணினிகள் பயன்படுத்துவது விசேட அம்சமாகும்.

# பொது போக்குவரத்தில் 'CCTV' பொருத்தவும்

பாடசாலைகளிலும், ரயில், பேருந்து போன்ற பொதுப் போக்குவரத்து வாகனங்களிலும் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகும் சம்பவங்கள் அடிக்கடி பதிவாகி வருகின்றன. குருநாகல் பிரதேசத்தில் பஸ் சாரதி மற்றும் நடத்துனரின் உதவியுடன் பாடசாலை மாணவி ஒருவர் பயணிகள் பேருந்தில் வைத்து துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாடசாலைகள் மற்றும் பொது போக்குவரத்து வாகனங்களில் சிறுவர்கள் அடிக்கடி துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகின்ற சம்பவங்கள் அரசாங்கத்தை பெரிதும் கவலையடையச் செய்யும் விடயமாகும். "இதுபோன்ற சம்பவங்கள் ஒவ்வொரு பாடசாலையிலும் நடக்கும் என்று நான் கூறவில்லை, ஆனால் பாடசாலைகளில் சில ஆசிரியர்களால் குழந்தைகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படும் சம்பவங்கள் பல நடந்துள்ளன. மேலும், பொது போக்குவரத்து வாகனங்களில் குழந்தைகளும் பெண்களும் அடிக்கடி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகின்றனர்.

இதுபோன்ற பெரும்பாலான சம்பவங்களை உறுதிப்படுத்த போதுமான ஆதாரங்கள் இல்லாதது ஒரு பிரச்சினை , போதுமான ஆதாரங்கள் இல்லாததால் குற்றவாளிகள் சட்டத்திலிருந்து தப்பிப்பது இதுபோன்ற குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடுமையான அநீதி என்று அவர் குறிப்பிட்டார்.

" குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். குறிப்பாக, பாடசாலைகள் மற்றும் பொதுப் போக்குவரத்து வாகனங்களில் சிசிடிவி கமரா அமைப்புகளை பொருத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்க எதிர்பார்க்கிறேன். சில கட்சிகள் இந்த நடவடிக்கையை எதிர்க்கும் என்று எனக்குத் தெரியும், ஆனால் பாடசாலைகள் இரகசியமாக இருக்க வேண்டிய இடங்கள் அல்ல, எனவே அவற்றில் கெமராக்கள் பொருத்துவதன் மூலம் யாருக்கும் அநீதி இல்லை, "என்று அவர் தெரிவித்துள்ளார்.

# "பஸ் கட்டணத்தை கூட்டுமாறு கோருவோம்"

செப்டெம்பரில் டீசலின் விலை ரூ.10 இனாலும் ஒக்டோபர் 31 ஆம் திகதி ரூ.5 இனாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றார்.

டீசலின் விலை குறைக்கப்பட்டால் போக்குவரத்து செலவு குறைக்கப்படும். தற்போதைய எரிபொருள் விலையை கருத்தில் கொண்டு பஸ் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்படுமாயின் அது இரண்டு சதவீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும். மேலும் ரூ.10 அல்லது ரூ.15 அதிகரிக்கப்படும்.

எவ்வாறாயினும், மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த சில வாரங்களில் பஸ் கட்டணத் திருத்தம் மேற்கொள்ளுமாறு போக்குவரத்து அமைச்சின் செயலாளரிடம் அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுக்க உள்ளதாக அதன் தலைவர் தெரிவித்தார்.

இதேவேளை, எரிபொருட்களின் விலைகளில், செவ்வாய்க்கிழமை (31) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒக்டேன் 92 ரக பெட்ரோல் ஒரு லீட்டரின் விலை 9 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒக்டேன் 92 ரக பெட்ரோலின் புதிய விலை 356 ரூபாயாகும்.

ஒக்டேன் 95 ரக பெட்ரோல் ஒரு லீட்டரின் விலை 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 423 ரூபாயாகும்.

டீசல் ஒரு லீட்டரின் விலையும் 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுவரை 351 ரூபாவாக காணப்பட்ட ஒரு லீட்டர் டீசலின் விலை 356 ரூபாயாகும்.

சுப்பர் டீசல் ஒரு லீட்டரின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. இதற்கமைய, சுப்பர் டீசலின் புதிய விலை 431 ரூபாயாகும். மண்ணெண்ணெய் விலை 249 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

# பெண்ணுடன் பறக்க முயன்ற கணவன் கைது

தொழில்நுட்ப சோதனைகள் மற்றும் முதற்கட்ட விசாரணைகளின் போது இந்த சிறு குழந்தைக்கு அவர் தந்தை என்பது உண்மை. எனினும், அப்பெண், இவரது மனைவி இல்லை என தெரியவந்துள்ளது.

இந்த நபர் சில வாரங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வந்த போது இத்தாலியில் இருந்து தனது மனைவியின் கடவுச்சீட்டை கொண்டுவந்துள்ளார். கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு முத்திரையை போலியாக தயாரித்து அதில் குத்தியும் உள்ளார்.

அதே கடவுச்சீட்டைப் பயன்படுத்தி மற்றுமொரு பெண்ணை இத்தாலிக்கு அழைத்துச் செல்ல முயற்சித்ததை குடிவரவு அதிகாரிகள் மேலும் கண்டுபிடித்துள்ளனர்.

அவர் தனது மனைவியின் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி மற்றொரு பெண்ணை இத்தாலிக்கு அழைத்துச் சென்றுள்ளமையும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

# சிவன் கோயிலை பார்த்து இந்துக்கள் கவலை




வி.ரி.சகாதேவராஜா

கன்னியா வெந்நீர் ஊற்று வளாகத்தில் அமைந்துள்ள சிவன் கோயில் பூட்டு போட்டு மூடப்பட்டு காணப்படுகிறது. அந்த சிவன் கோயில் படிக்கட்டில் நாய் படுக்கிறது. இந்த காட்சி அங்கு செல்லும் இந்துக்கள் மத்தியில் மிகுந்த கவலையை அளிக்கிறது.

அங்கு சென்று பொறுப்பாளரிடம் விசாரித்த பொழுது பூசாரிதான் பூட்டி இருக்கிறார் என்றும் கூடவே நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் அது பூட்டப்பட்டு காணப்படுவதாகவும் கூறினர் .

சுற்றுலா செல்லும் இந்துக்கள் பூட்டிய கோயிலுக்கு வெளியே நின்று சிவனை வழிபட்டு வருவதனை காணக் கூடியதாக இருக்கிறது. சூழலும் அசுத்தமாக காணப்படுகின்றது.

# 62...

அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி, பதுளை மாவட்டத்தில் ஹப்புத்தளை மற்றும் ஹல்துமுல்ல, கொழும்பு மாவட்டத்தில் சீதாவக்க, காலி மாவட்டத்தில் நியாகம பத்தேகம, எல்பிட்டிய, காலி கோட்டை, அக்மீமன, அம்பலாங்கொட, போபே பொத்தல, நெலுவ, இமதுவ, தவளம், நாகொட மற்றும் யக்கலமுல்ல, வலஸ்முல்ல, பெலியத்த ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில், களுத்துறை மாவட்டத்தில் வலல்லாவிட்ட மற்றும் இங்கிரிய, கண்டி மாவட்டத்தில் யட்டிநுவர மற்றும் உடுநுவர, ருவன்வெல்ல, புலத்கொஹுபிட்டிய, கலிகமுவ, தெஹியோவிட்ட, மற்றும் கேகாலை மாவட்டத்தில் கேகாலை, மாவத்தகம, ரிதிகம மற்றும் பொல்கஹவெல, குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம மற்றும் பொல்கஹவெல, பசகொட, சத்தரா வெத்தகொட, பசகொட , அக்குரஸ்ஸ, கம்புருபிட்டிய, மாத்தறை மாவட்டத்தின் பிட்டா, கடன், அத்துரலிய, முலட்டியன, கொட்டப்பலே, மாலிம்பட, கிரிந்த புஹுல்வெல்ல, மற்றும் ஹக்மன, கிரியெல்ல, கஹவத்தை, நிவித்திகல, அயகம மற்றும் பெல்மதுல்ல ஆகிய பிராந்திய செயலாளர் பிரிவுகளுக்கு இரத்தினபுரி மாவட்டத்தில் முதல் நிலை வழங்கப்பட்டுள்ளது. எச்சரிக்கை அறிவிப்பு.

கண்டி மாவட்டத்தில் தும்பனை பிரதேச செயலாளர் பிரிவு, மாத்தளை மாவட்டத்தின் லக்கல பல்லேகம பிரதேச செயலாளர் பிரிவு, இரத்தினபுரி, கொலொன்ன, கொடகவெல, வெலிகேபொல, குருவிட்ட, கலவான, இம்புல்பே, பலாங்கொடை, அலபாத, லெ மற்றும் அஹெலலிய கிரேலியாட் ஆகிய பிரிவுகளுக்கு இரண்டாம் நிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# நியமன...

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவிருந்த இந்த நிகழ்வு திருகோணமலை இந்துக் கலாசார மண்டபத்தில் 4ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்தது.

தவிர்க்க முடியாத காரணத்தினால் இந்த நிகழ்வு எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை அதே இடத்தில் நடைபெறும்என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது. அன்று காலை 7 மணிக்கு மண்டபத்திற்குள் வந்து அமருமாறு புதிய அதிபர்களுக்கு பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## வீதி விபத்துக்களால்

# 2023 இல் 115 சிறுவர்கள் மரணம்

வீதி விபத்துக்களினால் ஏற்படும் மரணங்கள் மற்றும் அங்கவீனமடைதல் ஆகியவற்றை மட்டுப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் உயர்மட்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பு காலி முகத்திடல் ஹோட்டலில் நடைபெற்ற "Safe Roads-Safe Children" சர்வதேச மாநாட்டில் புதன்கிழமை (01) கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் மருத்துவச் சங்கத்தின் (SLMA) வீதி விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்கான நிபுணத்துவ குழுவினால் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வீதி விபத்துக்களால் தவிர்க்க முடியாத வகையில் நேரும் சிறுவர் மரணம், வாழ்நாள் முழுவதுமான அங்கவீனம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் மாநாட்டில் விசேட கவனம் செலுத்தப்பட்டதோடு, அதற்காக கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, சட்டம் மற்றும் ஒழுங்கு உள்ளிட்ட துறைகளின் பணிகள் தொடர்பிலும் பல சுற்றுப் பேச்சுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்விற்காக அழைப்பு விடுக்கப்பட்ட வேளையில், வீதி விபத்துக்களினால் ஏற்படும் மரணங்கள் மற்றும் அங்கவீனமடைதல் ஆகியவற்றை மட்டுப்படுத்துவதற்கான குழுவொன்றை நியமிப்பது தொடர்பில் ஆலோசித்தோம் என்றார்.

# “ஹட்டனுக்கு தேடி வராதீர்கள்”

ஹட்டன் நகரில் வாகனங்கள் விற்பனைக்கு உள்ளதாக சமூக வலைத்தளங்களில் விளம்பரங்களை வெளியிட்டு, மோசடிகள் இடம்பெற்று வருவதாக ஹட்டன் பிரதேச சமூக வலைத்தள பாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சந்தையில் அதிக மதிப்புள்ள வாகனங்களின் படங்களை வெளியிட்டு, மிகக் குறைந்த விலையில் வாகனங்கள் விற்கப்படுவதாக விளம்பரம் செய்கின்றனர்.

விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி எண்ணுக்கு வாகனம் வாங்குபவர்கள் அழைத்து, வாகனம் குறித்த தகவல்களைக் கேட்டுக்கொள்கின்றனர்.

வாகனம் ஹட்டனில் உள்ள வீடொன்றில் உள்ளது. வாகனத்தைப் பரிசோதிக்கும் முன், வங்கிக் கணக்கில் முற்பணம் செலுத்துமாறு விளம்பரம் செய்தோர் கூறுவதாக, அழைப்பை எடுத்தவர்கள் கூறியுள்ளனர்.

குறித்த வாகனம் இருக்கும் இடம் தொடர்பில் விளம்பரம் செய்த நபரிடம் இருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் வாகனம் வாங்க வந்தவர்கள் அப்பகுதியில் வாகனம் இல்லாததைக் கண்டு பிடித்துள்ளனர்.

ஹட்டன் பிரதேசத்தில் வீடுகள், காணி, வாகனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் விற்பனைக்கு உள்ளதாக சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் விளம்பரங்களை சரிபார்க்காமல் வங்கிகளில் முன்பணத்தை வைப்பதைத் தவிர்க்குமாறு பாதுகாப்பு அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




# ‘ஒரே கிராமம் ஒரே நாடு’ கலந்துரையாடல்

‘ஒரே கிராமம் ஒரே நாடு’ என்ற கருத்தின் கீழ் மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான 17ஆவது கலந்துரையாடல் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் புதன்கிழமை (01) இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்தின் உணவுப் பாதுகாப்புத் திட்டம், உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் விவசாயம் உள்ளிட்ட திட்டங்கள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டன.

வடமாகாண பாடசாலைகளின் உயர்தர மற்றும் சாதாரணதரப் பரீட்சையில் தோற்றி சித்தியடையாத மாணவர்களின் முழுமையான அறிக்கையை தமக்கு வழங்க விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் இங்கு தெரிவித்தார். மேலும், நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள போதிலும், அபிவிருத்தி நடவடிக்கைகள் முடிந்தவரை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். வவுனியாவின் அபிவிருத்தி தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், வவுனியா நகரசபைக்குச் சென்று புதிய தொழில்நுட்பத்தின் மூலம் இலகுவாக இணையவழி வரி செலுத்தும் பணியினை பிரதமர் ஆரம்பித்து வைத்துள்ளார். இக்கலந்துரையாடலில் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பிரதிநிதிகள், வடமாகாண சபை செயலாளர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

சிறுமி வன்புணர்வு:

# 66 வயதானவருக்கு கடூழிய சிறை

சிறுமி ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட ஒருவருக்கு எம்பிலிப்பிட்டிய மேல் நீதிமன்ற நீதிபதி 25 வருடங்கள் கடூழிய சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

சம்பவம் இடம்பெற்றபோது சந்தேகநபருக்கு 44 வயதாகும். தற்போது அவருக்கு 66 வயதாகும்.

இச்சம்பவம் தொடர்பில் எம்பிலிப்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்டிருந்த



முறைப்பாட்டுக்கு இணங்க பொலிஸார் எம்பிலிப்பிட்டிய செவனகல மஹகம பிரதேசத்தை சேர்ந்த சந்தேக நபருக்கு எதிராக எம்பிலிப்பிட்டிய மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இருந்தனர்.

சிறுமி மீது குறித்த நபர், 2011ஆம் ஆண்டு பலமுறை பாலியல் வன்புணர்வில் ஈடுபட்டதாக குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கின் தீர்ப்பு 12 ஆண்டுகளுக்கு பின்னர் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

தீர்ப்பினை வழங்கிய நீதிபதி புத்திக சீராகல சிறைத்தண்டனையுடன் சிறுமிக்கு 2 இலட்சம் ரூபாய் நஷ்ட ஈட்டை வழங்குமாறும் 25,000 ரூபாய் அபராதத்தை செலுத்துமாறும் தீர்ப்பளித்துள்ளார்.

# வழிப்பறியில் ஈடுபட்டவர் கைது

ரீ.எல்.ஜவ்பர்கான், எம்.எஸ்.எம்.நூர்தீன்

ஆலய வழிபாட்டுக்குச் செல்லும் பெண்களிடம் வழிப்பறியில் ஈடுபட்டு வந்த கொள்ளைக் கும்பலைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - கோப்பாய் பகுதியில் ஆலயம் செல்லும் பெண்களை இலக்கு வைத்து வழிப்பறியில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த 28 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாகவும் கைது அவரிடமிருந்து 10 தங்கப் பவுண் நகைகள், கைப்பைகள், அலைபேசிகள் மற்றும் வழிப்பறிக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# சிறுமியின் விபரீத முடிவு

தன்னுயிரை மாய்த்துக் கொண்டதாக கூறப்படும் 9 வயது சிறுமியின் சடலம் பொரளை ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு செவ்வாய்க்கிழமை (31) இரவு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

கொழும்பு- மருதானை பிரதேசத்தை சேர்ந்த சிறுமி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கன மழையால் தாழிறங்கிய வீதி

செ.தி.பெருமாள்

மஸ்கெலியா - புரவுன்ஷீக் தோட்டம், கெஸ்கீபன் பிரிவிற்கு செல்லும் பிரதான வீதியில் ஒரு பகுதி செவ்வாய்க்கிழமை (31) பெய்த கன மழையால் தாழ் இறங்கியுள்ளது.

இதனால் அப்பகுதி மக்கள் மிகவும் அவதானமாக அந்த வீதியில் கடக்க வேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும், இந்த வீதி



அருகில் சாமிமலை ஓயா பெருக்கெடுத்து ஓடுகின்றதால் கன மழை பெய்யும் பட்சத்தில் இந்த பகுதியில் பாரிய அளவில் தாழ் இறங்கும் அபாயம் உள்ளதாக தெரியவந்துள்ளது.

# பெரும்போக வேளாண்மை செய்கை ஆரம்பம்

ஹஸ்பர்

தம்பலகமம் பிரதேச தம்பலகமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மயில்தீவு, ஆறாம்வாய்க்கால் முதலான பகுதிகளில் வேளாண்மை செய்கைக்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

உழுதுதல், விதைத்தல், வரம்பு சீராக்கள் முதலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருதோடு, இப்பகுதியில் சுமார் 2000க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் வேளாண்மை செய்கையை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பெரும் போகத்துக்கான உரம், பசளை இன்னும் வழங்கப்படவில்லை என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இருந்தபோதிலும், கமநல



சேவைகள் நிலையத்தின் மூலம் அவற்றை வழங்குவதாகவும் இப்பசளைகளை உரிய காலத்துக்குள் வழங்குமாறு விவசாயிகள் கூறியுள்ளனர்.

அவ்வாறு விழங்காவிட்டால் கடந்த காலங்களில் நோய் ஏற்பட்டதைப் போன்று இம்முறையும் நஷ்டம் ஏற்படும் எனவும் உரிய காலத்துக்குள் பசளை எண்ணையைத் தந்து எங்களுடைய விவசாயத்தை கடந்த காலங்களைப் போன்று பாதிப்புகள் ஏற்படாமல் இம்முறையாவது விளைச்சல் கிடைப்பதற்கு உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# மருந்தகத்தை உடைத்து கொள்ளை

கந்தளாய் பகுதியில் அமைந்துள்ள மருந்தகம் ஒன்றினை இனந்தெரியாதவர்களால் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்களைத் திருடிச் சென்றுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த திருட்டுச் சம்பவம் கந்தளாய் பேராறு பகுதியில் செவ்வாய்க்கிழமை (31) இடம்பெற்றுள்ளதுடன், திருடப்பட்ட பொருட்களின் பெருமதி ரூபாய் சுமார் 2 இலட்சத்திற்கும் அதிகம் என கந்தளாய் பொலிஸார் கூறியுள்ளனர்.

குறித்த நபர்களால் மருந்தகத்தில் உள்ள சி.சி.ரி.வி கேமராக்களின் சேமிப்பு கருவியையும் உடைத்துக் கொண்டு செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறுமியை கடத்திய இளைஞன்; பெற்றோரை அழைத்தவர் கைது

அநுராதபுரம் - கட்டுகலியாவ, ஹெடுவெவ பிரதேசத்தில் வசித்து வரும் 15 வயது சிறுமி ஒருவர் கடத்தப்பட்ட சம்பவமொன்று ஞாயிற்றுக்கிழமை (29) பதிவாகியுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞன் ஒருவன் சம்பவ தினத்தன்று வீட்டுக்குள் நுழைந்து சிறுமியை கடத்திச் சென்றதாக சிறுமியின் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

சிறுமியை கடத்திய பின்னர், அப்பகுதியில் உள்ள பிரபல தொழிலதிபர் ஒருவர், சிறுமியின் பெற்றோக்கு தொலைபேசி மூலமாக அழைத்து, சிறுமி தனது பாதுகாப்பில் இருப்பதாகவும், சிறுமி கடத்தப்பட்டதை குறித்து பொலிஸாரிடம் அளித்த புகாரை திரும்ப பெறாவிட்டால், சம்பந்தப்பட்ட இளைஞனுடன் சிறுமியை திருமணம் செய்து வைப்பேன் என கூறி மிரட்டியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த அநுராதபுரம், திபுல்வெவ பொலிஸாரால் குறித்த தொழிலதிபரை செவ்வாய்க்கிழமை (31) கைது செய்து கஹட்டகஸ்திகிலிய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது, எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

எனினும், கடத்தப்பட்ட சிறுமி மற்றும் சிறுமியை கடத்திய இளைஞன் தொடர்பில் எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.





ஊடகவியலாளர்கள் ஜனநாயகத்தின் காவலர்கள்

சக்தி வாய்ந்தவர்களை பொறுப்புக்கூற வைப்பதற்கும், குரலற்றவர்களுக்கு குரல் கொடுப்பதற்கும் அவர்களே பொறுப்பு.

எனினும், அரசியல் அடக்குமுறையின் கீழ் முதன்மையாக பாதிக்கப்பட்டவர்கள் ஊடகவியலாளர்களே

ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனையின்மையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான சர்வதேச தினம் - 2023

இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்

96, கிருல வீதி, கொழும்பு 05. | தொலைபேசி +94-11-5353635 | தொலைநகல் +94-11-5335500 | மின்னஞ்சல் info@slpi.lk | வலைத்தளம் www.slpi.lk

NSSL | TEGOSL | FMM Sri Lanka Free Media Movement | SLWJA | ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் Sri Lanka Press Institute

# தலையை நுழைக்காவிட்டால் பிரச்சினைகள் குறையும்

அரசியலைப் பொறுத்தவரையில் பிரச்சினைகள் பிச்சைக்காரனின் புண்ணாகவே இருக்கவேண்டும். அதாவது, “ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்” என்பார்கள் அதேபோன்றதொரு நிலைமையே அரசியல்வாதிகள் பெரும்பாலும் எதிர்பார்ப்பார்கள்.

சிறுசிறு பிரச்சினைகளைக் கூட உடனடியாக தீர்க்காது இழுத்தடித்துக்கொண்டே செல்வர். இல்லையேல், இன, மத ரீதியில் மனங்களை நோகடிக்கும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுப்பர். சதா காலமும் ஏதாவதொரு பிரச்சினை அவ்வாறானவர்களுக்கு இருந்துகொண்டே இருக்கவேண்டும்.

வடக்கு, கிழக்கில் பௌத்த விகாரைகளை நிர்மாணிக்கும் பிரச்சினை, மேய்ச்சல் தரை பிரச்சினை, சிறுபான்மை இனங்களின் காணிகளை அபகரித்தல், மீன்பிடி பிரச்சினை, மீனவர்கள் அத்துமீறல் இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம்.

மலையகத்தைப் பொறுத்தவரையில், போக்குவரத்து, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளம், நலன்புரி உள்ளிட்டவற்றைக் குறிப்பிடலாம். இவை தவிர, விலைவாசி, முழு நாட்டுக்கும் பொதுவான பிரச்சினையாகவே இருக்கின்றது. இவற்றுக்கெல்லாம் தீர்வை காணமுடியும் எனினும், இழுத்தடிப்புகளே இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

வடக்கில் தொழில்புரியும் தென்பகுதி அரச ஊழியர்களுக்கு இடமாற்றங்களைப் பெற்றுக்கொடுக்க உள்ளதாக அறிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ், தவறுகளை திருத்தி தமிழர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

மேலே கூறப்பட்ட பிரச்சினைகளில் பெரும்பாலானவை அடுத்தவர்களின் விடயங்களில் மூக்கை நுழைப்பதால் ஏற்பட்டவையாகும். தங்களுக்குரிய உரிமைகளுடன் நிம்மதியாக வாழவிட்டால், எந்தவிதமான பிரச்சினைகளும் எழாது.

எனினும், உரிமைகளைக் கொடுக்காது அபகரிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்தால், பிரச்சினைகளை ஒருபோதும் தீர்க்கமுடியாது. நமது நாட்டு அரசியல்வாதிகள் பலர் ஊதிப் பெருப்பித்து அதில் குளிர்காய்வதற்கே முயற்சித்துக்கொண்டிருக்கின்றனர்.

வடமாகாணத்தில் உள்ள அரச நிறுவனங்களில் பணியாற்றுவதற்காகத் தென் பகுதியிலிருந்து வருவோர் பல பிரச்சினைகளை எதிர்கொள்வதால் அவர்களைச் சொந்த இடங்களுக்கு இடமாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அதாவது மொழி, தங்குமிடம் உள்ளிட்ட பிரச்சினைகளாகும். பெரும்பாலான அரச நிறுவனங்களில் தமிழ்மொழி புழக்கத்தில் இல்லை என்ற குற்றச்சாட்டுகள் இன்னும் உள்ளன. இந்நிலையில், தெற்கைச் சேர்ந்தவர்கள் வடக்குக்குச் சென்று எவ்வாறான கருமங்களை ஆற்றமுடியும்.

வடக்கில் அரச நிறுவனங்களில் நிலவிய வெற்றிடங்களுக்கு அங்குள்ளவர்களையே நியமனம் செய்திருந்தால், மொழி, தங்குமிட பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது. அத்துடன் மக்களுக்கு இலகுவாகச் சேவைகளைச் செய்திருக்கலாம். அதாவது, தலையை நுழைத்துவிடாமல் விட்டிருந்தாலே போதுமானதாக இருக்கும்.

பத்து வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு புதன்கிழமை (01) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த புள்ளிவிபரம் வெளியானதன் பின்னரே வடக்கு,கிழக்கில் சிறுபான்மையினர் செறிந்து வாழ்ந்த பகுதிகளின் நிலைமை அம்பலமாகும். வடக்கில் தொழில்புரியும் தென்பகுதி அரச ஊழியர்களுக்கு இடமாற்றங்கள் செய்வதற்கு எடுத்த முடிவு வரவேற்கத்தக்கது. அதனை துரிதப்படுத்துவே அவசியம்.




## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# சம்பந்தன் பதவி விலகுவதே மக்களுக்கான அறம்



புருஜோத்தமன் தங்கமயில்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் பாராளுமன்றக் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன், தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகி இன்னொருவருக்கு இடமளிக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கும் கருத்து ஊடகக் கவனம் பெற்றிருக்கின்றது. சம்பந்தன் கடந்த சில ஆண்டுகளாக வயது மூப்பினால் உடலளவில் பெரிதும் தளர்ந்துவிட்டார். அவரினால் வெளியிடங்களுக்குப் பயணிக்க முடியவில்லை. பாராளுமன்றத்துக்கான வருகை என்பது கிட்டத்தட்ட முடங்கிவிட்டது. அவர் என்ன பேசுகிறார் என்பதை இன்னொருவர் கேட்டுச் சொல்லும் நிலை இருக்கிறது.

அப்படியான நிலையில், பௌத்த சிங்கள அடிப்படைவாதத் தரப்புக்களின் தொடர் ஆக்கிரமிப்புக்களினால் அல்லாடும் திருகோணமலை மாவட்டத்திற்குக் களத்தில் செயற்படும் பாராளுமன்ற உறுப்பினரின் தேவை தவிர்க்க முடியாதது. மாவட்ட அபிவிருத்திக் கூட்டம் தொடங்கி களத்தில் மக்கள் பிரதிநிதியாக சம்பந்தன் பங்குபற்ற முடியாத போது, அந்த இடம் ஆக்கிரமிப்பாளர்களுக்கு பெரும் சாதகமான நிலையை ஏற்படுத்துகின்றது. அதனால்தான், திருகோணமலை மக்கள், சம்பந்தன் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இன்னொருவருக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் கடந்த சில வருடங்களாக இருக்கிறார்கள்.

கடந்த வருடம் தமிழரசுக் கட்சியின் மத்தியக் குழுக் கூட்டமொன்றின் போது, திருகோணமலை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் குழுவொன்று, சம்பந்தனை பதவி விலகுமாறு கோரிக்கையை வைத்தார்கள். இதனையடுத்து, சம்பந்தனை பவ்வியமாக பேசி பதவி விலகுமாறு கோருவதற்கான குழுவை, தமிழரசுக் கட்சி மாவை சேனாதிராஜா தலைமையில் அமைத்திருந்தது. அந்தக் குழு, சம்பந்தனைச் சந்தித்துப் பேசியும் இருந்தது. அப்போது, அந்தக் குழுவிடம், “...நான் உடல் தளர்ந்திருக்கிறேன் என்பதைத் தெரிந்து கொண்டுதான் திருகோணமலை மக்கள் தெரிவு செய்தார்கள். அப்படியான நிலையில் நான் ஏன் பதவி விலக வேண்டும்...” என்று சம்பந்தன் பதிலளித்திருக்கிறார். அத்தோடு அந்த விடயத்தைத் தமிழரசுக் கட்சி கைவிட்டது. ஆனால், திருகோணமலை மாவட்ட மக்களோ, தமிழரசுக் கட்சியின் மாவட்ட கிளையினரோ சம்பந்தனின் நிலைப்பாட்டை விசனத்துடன், நோக்கி வந்தனர். ஏனெனில், திருகோணமலையில் திட்டமிட்ட ரீதியில் பௌத்த அடையாளங்கள் திணிப்பு மற்றும் காணி அபகரிப்பு என்பன பெருவாரியாக இடம்பெற்று வருகின்றது. இதனைத் தடுப்பதற்காக தங்களின் பிரதிநிதி களத்தில் இருக்க வேண்டும் என்பதே மக்களின் ஒற்றைக் கோரிக்கை. ஆனால், சம்பந்தன் அதுபற்றி கவலையின்றி பதவியைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கிறார்.

கடந்த வாரம் தொலைக்காட்சி விவாதமொன்றில் நெறியாளர், பாராளுமன்றத்துக்கு வருகை தரமுடியாமல் இருக்கும் ஒருவருக்காக மக்களின் இலட்சக்கணக்கான பணம் மாதாந்தம் வீணடிக்கப்படுகின்றது. இதனை, ஊழலாகக் கருத முடியாதா? என்ற தொனியிலான கேள்வியொன்றை சம்பந்தன் தொடர்பில் எழுப்பினார். அதற்குப் பதிலளிக்கும் போது சுமந்திரன், சம்பந்தனின் பதவி விலகல் குறித்துப் பேசி கேள்வியை மடை மாற்றியிருக்கிறார். ஏனெனில், கேள்வி, மக்களின் இலட்சக்கணக்கான வரிப்பணத்தைப் பாராளுமன்றத்துக்கே வராமல் இருக்கும் ஒருவருக்காக செலவழிப்பது என்பது ஒருவகையில் ஊழலைப் போன்றதுதானே என்ற கேள்வியாக இருந்தது. அப்படியான நிலையில், சம்பந்தனை ஊழல்வாதியாகக் கேள்வி எழுப்பும் விடயத்தை மடைமாற்றுவதற்காக சுமந்திரன், சம்பந்தன் பதவி விலகுவது குறித்துப் பேசியிருக்கிறார்.

சம்பந்தனின் பதவி விலகல் குறித்த சுமந்திரனின் பேட்டி வெளியாகியதும், தமிழரசுக் கட்சிக்குள் இருக்கும் சுமந்திரன் எதிர்த்தரப்பினர், சம்பந்தனுக்கு ஆதரவாக அறிக்கைகளை விட ஆரம்பித்து விட்டார்கள். ஆனால், திருகோணமலை மக்களிடம் இருந்தோ, தமிழரசுக் கட்சியின் திருகோணமலைக் கிளையிடம் இருந்தோ எந்த எதிர்ப்பும் இதுவரை சுமந்திரனுக்கு எதிராக எழவில்லை.

குறித்த தொலைக்காட்சி பேட்டியில் சுமந்திரன், சம்பந்தன் பதவி விலகத் தேவையில்லை என்று பதிலளித்திருப்பாரானால், எதிர்வினைகளை வேறு மாதிரியாக இருந்திருக்கும். அப்போது, திருகோணமலை ஆக்கிரமிப்புக்குள்ளாகி வரும் நிலையில் களத்தில் செயற்படுவதற்குப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தேவை. அதனை உணர்ந்து கொள்ளாமல் சம்பந்தனைத் தொடர்ந்தும் காப்பாற்றும் வேலைகளில் சுமந்திரன் ஈடுபட்டு வருகிறார். இது, திருகோணமலை மக்களுக்கு சம்பந்தனும் சுமந்திரனும் இழைக்கும் துரோகம் எனும் அறிக்கைகள் வெளியாகியிருக்கும். அப்போதும் சுமந்திரன் பேசுபொருளாகியிருப்பார்.

வயது மூப்பு உபாதைகளினால் அல்லாடுவதனால் கடந்த பொதுத் தேர்தலில் நேரடியாகப் போட்டியிடும் எண்ணத்தில் சம்பந்தன் இருக்கவில்லை. அதற்காகவே அவர் திருகோணமலையில் குகதாசனை அடுத்த பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் முன்னிறுத்தி கட்சிக் கிளையைக் கையளித்திருந்தார். ஆனால், தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வது தொடர்பிலான கலந்துரையாடல்களில் சம்பந்தனை எப்படியாவது நேரடி வேட்பாளராக நிறுத்திவிட வேண்டும் என்பதில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா குறியாக இருந்தார். வயது மூப்பினை முன்னிறுத்தி சம்பந்தன் போட்டியில் இருந்து விலகிவிட்டால், தனது வயதைக் காரணங்காட்டி யாழ்ப்பாணத்தில் தன்னாலும் போட்டியிட முடியாமல் போய்விடும் என்பது அவரின் பயம். அத்தோடு, சம்பந்தன் நேரடியாகப் போட்டியிடாவிட்டாலும் கிடைக்கும் தேசியப் பட்டியல் ஊடாக அவர் பாராளுமன்ற உறுப்பினராகி விடுவார். அப்படியான நிலையில், தேசியப் பட்டியல் பதவியும் தனக்குக் கிடைக்காது. அதனால், சம்பந்தனை போட்டியிட வைப்பதுதான், தான் மீண்டும் போட்டியிடுவதற்கான ஒரே வழி என்று மாவை நம்பினார். அதனால்தான், போட்டியிட விரும்பாத சம்பந்தனை வற்புறுத்தி திருகோணமலை மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட வைத்தார்கள்.

அப்போது, சம்பந்தன் இரண்டு நிபந்தனைகளை முன்வைத்தே தேர்தலில் போட்டியிடுவதற்கு இணங்கினார். அதில் முதலாவது, தான் தேர்தலில் நேரடியாகப் போட்டியிடுவதாக இருந்தால் கட்சிக்குக் கிடைக்கும் தேசியப்பட்டியலில் திருகோணமலைக்கு முதலாவதாக ஒதுக்க வேண்டும். அதுவும், குகதாசனுக்கு அது வழங்கப்பட வேண்டும். இரண்டாவது நிபந்தனை, தான் ஒரு வருடத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகிவிடுவேன். இவற்றுக்கு இணங்கினால் தான் தேர்தலில் நேரடியாகப் போட்டியிடுகிறேன் என்று சம்பந்தன் கூறியிருந்தார். அந்தத் தேர்தலில் சம்பந்தன் போட்டியிட்டு வெற்றிபெற்று மூன்று ஆண்டுகள் தாண்டி விட்டது. ஆனால், அவர் இப்போதும் பதவியில் இருக்கிறார்.

முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்குப் பின்னரான கடந்த 14 ஆண்டுகளில் சம்பந்தன், தமிழ்த் தேசிய அரசியலில் அசைக்க முடியாத தலைவர். வயது மூப்பின் அவஸ்தைகளினால் அவர் அல்லாடத் தொடங்கிய பின்னரே, கூட்டமைப்பு பிளவு கண்டது. இன்றும் தமிழ்த் தேசிய அரசியலின் பெருந்தலைவராக சம்பந்தனையே தென் இலங்கையும் சர்வதேசமும் நோக்குகின்றது. அப்படியான நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் பதவி இருந்தால்தான் தனக்கு மரியாதை என்று நினைப்பதெல்லாம் இவ்வளவு அரசியல் அனுபவமுள்ள சம்பந்தனுக்கு நல்லதல்ல. அவரின் சுயநல சிந்தனை, திருகோணமலை போன்ற அச்சுறுத்தலை எதிர்கொண்டிருக்கின்ற தமிழ்ப் பாரம்பரிய நிலத்தைத் தொடர்ச்சியாகக் காவு கொடுப்பதற்குக் காரணமாக மாறுகின்றது.

தமிழரசுக் கட்சி இன்று களத்தில் செயற்படும் நிலையை மெல்ல மெல்ல இழந்து வருகின்றது. கட்சிக்குள் சுமந்திரன், சிறீதரன் போன்ற ஓரிருவர் மாத்திரமே செயற்பாட்டாளர்களாக இருக்கிறார்கள். இன்னொரு பக்கம் கட்சியை தோல்வியின் பக்கத்தில் நகர்த்தினாலும் தலைமைப் பதவியை விட்டுக் கொடுப்பதற்கு தயாராக இல்லாதவராக மாவை சேனாதிராஜா இருக்கிறார். அவர், கட்சியின் செயல் தலைவராக தனது மகனை நியமித்துவிட்டாரா என்ற கேள்வி எழுகின்றது.

ஏனெனில், அவர் தமிழ்க் கட்சிகளின் முக்கிய கூட்டங்களுக்கு எல்லாம் தனக்குப் பதிலாக மகனை அனுப்பி வருகிறார். அதனை தமிழரசுக் கட்சியின் நிர்வாக கட்டமைப்பு ஏற்றுக் கொள்கிறதா என்ற கேள்வி எழுகின்றது. ஒரு பக்கம் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவராக சம்பந்தன் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பற்றிப்பிடித்திருக்கிறார். இன்னொரு பக்கம் மாவை கட்சித் தலைமையை கைவிடுவதாக இல்லை. இவர்கள் இருவரும் அரசியலில் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக அனுபவத்தைக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இன்றைய அரசியல் ஒழுங்கைப் புரிந்து கொள்ளாமல் தவறிழைக்கிறார்கள். இது, வரலாற்றுத் தவறாக பதிவாகும் சூழல் ஏற்பட்டுவிடலாம்.



## வாழ்வியல் தரிசனம்

அடுத்தவர் விடயங்களில் சுவாரஸ்யங்களைத் தேடுபவர்கள், தங்களின் பிரதான வேலைகளை மறந்துவிடுகின்றார்கள்.

கடைக்குப் பொருட்களை வாங்கச் செல்பவர்கள், தெருச் சண்டைகளை இரசிப்பதால், வீட்டுக் கருமங்களையே மறந்துவிடுகின்றார்கள்.

பலரது நேரம், வீணாகவே விரயமாகிக் கொண்டிருக்கின்றது. பொழுதுபோக்கு எனும் பெயரில், மனிதன் சோம்பேறியாவதும் உண்டு. கடுமையாக உழைப்பவர்களுக்கே ஓய்வு தேவைப்படுகின்றது.

கடின உழைப்பை நிராகரிப்பது போல் நடப்பது, மகாதவறு. இதனால், கடின உழைப்பாளிகள் சமூகத்தில் நம்பிக்கை இழந்துவிடுகின்றார்கள்.

குடும்பத்திலும் அக்கறை காட்டாமல், தங்களைச் சுற்றியிருப்பவர்களின் காலத்தை வீணடிப்பவர்கள், உலகுக்குப் பாரமாகின்றார்கள். காலத்தை வீணடிப்பவர்கள், உலகுக்குப் பாரமாகின்றார்கள். காலத்தை வீணடிப்பவர்கள், உலகுக்குப் பாரமாகின்றார்கள்.

மனித ஆளுமை, அறிவிலும் செயலிலும் தங்கியிருக்கின்றது. சகல உயிர்களும் தமக்கான கருமங்களைச் செய்தபடியே இருக்கின்றன. உலகை மெருகூட்ட கடமையைச் செய்க!

- பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### 6 வருடங்கள் கடந்து விட்டன



மஸ்கெலியா, ப்ரௌன்ஸ்வீக் தோட்டத்தின் எமிலினா பகுதியில் ஏற்பட்ட மண்சரிவினால் வீடுகளை இழந்த 18 தோட்டத் தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்குவதற்காக அதே தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய தோட்ட வீட்டுத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் 6 வருடங்களாக நிறுத்தப்பட்டுள்ளன.

மண் சரிவில் இடம்பெயர்ந்த தோட்ட சமூகத்தினருக்கு இதுவரை வீடுகள் வழங்கப்படவில்லை இதனால், தொழிலாளர்கள் விரக்தியில் உள்ளனர்.

அப்போதைய அரசாங்கத்தின் தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சர் பழனி திகாம்பரத்தின் வேண்டுகோளுக்கு இணங்க 07 பேர்ச்சஸ் காணியுடன் கூடிய இந்த 18 தோட்ட வீடுகளின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதுவரை அந்த வீடுகளின் சுவர்கள் கட்டப்பட்டு, ஜன்னல்கள் மற்றும் கதவுகள், மின்சாரம், தண்ணீர் வசதிகள் மற்றும் நுழைவாயில்கள் கட்டி .கட்டுமானம் முழுமையடையாத நிலையில் உள்ளது.

- செ.தி.பெருமாள்



# யாழ். நகரில் சணச லைஃப் இன்சூரன்சின் புதிய கிளை

சணச லைஃப் இன்சூரன்ஸ் பீ.எல்.சி தனது புதிய கிளையை யாழ்ப்பாண நகரில் திறந்துள்ளது. இல.237, ஸ்டாண்ட்லி வீதி எனும் முகவரியில் இந்த புதிய கிளை அமைந்துள்ளது.

நாட்டின் சம்பிரதாயங்களுக்கு முதலிடம் கொடுத்து இடம்பெற்ற இத் திறப்பு விழா நிகழ்வு, சணச குழுமத்தின் தலைவர் கலாநிதி பி.ஏ.கிரிவந்தெனிய தலைமையில் நடைபெற்றதுடன் சணச லைஃப் இன்சூரன்சின் நிர்வாக இயக்குனர் மற்றும் உயர் மட்ட முகாமையாளர்கள் பலரும் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

யாழ்ப்பாண கிளையை தெரிவு செய்யும் போது யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய முறைமைகள் பாதுகாக்கப்படும் வகையில் அனைத்து சமய நடவடிக்கைகளும் நிகழ்த்தப்பட்டதுடன், யாழ்ப்பாணத்தின் புராதன சம்பிரதாயங்களை பின்பற்றி கிளையின் நடவடிக்கைகளை செயற்படுத்தியமை இதன் மூலமாகத் தெளிவாகின்றது. அதிகளவான வர்த்தகங்கள், உயர் கல்வி நிலையங்கள், நிதி நிறுவனங்கள் என்பன அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்படுவதுடன் யாழ் நகர மக்களுக்கு மேலும் சிறந்த வசதிகளையும், இலகுவான முறையில் தமது காப்பீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் நாடு முழுவதும் கிளைகளைக் கொண்டுள்ள எமது நிறுவனமானது, தனது இன்னும் ஒரு புதிய ஆரம்பமாக யாழ்ப்பாணக் கிளையைத் திறக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்குவதில் உயர் தரத்துடன் செயற்படும் சணச லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனம், தொடர்ந்தும் உள்நாட்டு வெளிநாட்டு விருதுகளைப் பெற்றுள்ளதுடன், கொவிட் தொற்றுநோய் பரவல் போன்ற சவால்களுக்கு சிறப்பாக முகங்கொடுத்து பலம்மிக்க வர்த்தகத்தை உருவாக்கியுள்ளமை மட்டுமல்லாது மக்களுக்கான நலன்புரி நிகழ்வுகள் பலவற்றினை நாட்டில் செயற்படுத்துவதில் முக்கிய பங்களிப்பினை வழங்கும் நிறுவனமாகவும் சணச லைஃப் திகழ்கின்றது.

அதே போல் நாடு பூராகவும் அனைத்து மக்களுக்கும் அந்நியோன்ய சேவையினை வழங்கி அனைத்து ஆயுட் காப்புறுதி தேவைகளையும் ஒரே கூரையின் கீழ் வழங்கும் திறனை கொண்டதுடன் வாடிக்கையாளர்களுக்கு மிகவும் உயரிய நம்பகத்தன்மையான பிரதிபலன்கள் மற்றும் சேவை வழங்குநராக இலங்கையின் பொருளாதாரத்தில் தனித்துவமாக பங்காற்றி செயற்படும் சணச லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனமானது இலங்கை முழுவதும் 100 க்கும் அதிகமான கிளைகளை உள்ளடக்கிய பாரிய காப்புறுதி நிறுவனமாகவும் திகழ்கின்றது.

### ஆர்மீனியாவில் மருத்துவப் பட்டப்படிப்பைத் தொடர

# QIB Campus இடமிருந்து புலமைப்பரிசில்கள்




வெளிநாட்டுக் கல்வி வசதிகளை வழங்குவதில் இருபது வருட அனுபவமுள்ள குயின்ஸ் இன்டர்நேஷனல் பிஸ்னஸ் கம்பஸ் வழிகாட்டுதலின் கீழ், கிழக்கு ஐரோப்பாவின் ஆர்மேனியாவின் பிரதான பொது மருத்துவப் பல்கலைக்கழகமான யெரெவன் மாநில மருத்துவ பல்கலைக்கழகத்தில் மருத்துவம் கற்கச் செல்லும் இலங்கை மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

2000க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 100 பேர் இம்முறை யெரெவன் மாநில மருத்துவ பல்கலைக்கழகம் மூலம் தங்களின் மருத்துவக் கனவை நனவாக்க முடியும். க.பொ.த உயர்தர உயிரியல் பிரிவில் இரண்டு சித்திகள் மற்றும் சராசரி சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் மேலும் இம்முறை உயர்தரப் பெறுபேறுகள் தாமதமாக வருவதால், ஒக்டோபர் மாதம் விண்ணப்பிப்பதற்கான காலக்கெடு ஒக்டோபர் மாதம் 30 வரை நீட்டிக்கப்பட்டிருந்தது. 30ஆம் திகதி வரை விண்ணப்பித்தவர்களுக்கு நுழைவுத் தேர்வுக்கு தோற்றுவதற்காக QIB Campus வாய்ப்பை வழங்கியுள்ளது. 2023ஆம் கல்வியாண்டிற்காக புறப்பட்டு செல்லும் நாள் நவம்பர் மாதம் 15ஆம் திகதி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

யெரெவன் மாநில மருத்துவ பல்கலைக்கழகத்தில் ஐந்தாண்டு பட்டப்படிப்பு மற்றும் ஒரு வருட மருத்துவ பயிற்சியை முடித்த மாணவர்கள் ஆர்மீனியாவில் அரசு மருத்துவராகப் பணிபுரிந்து மாதச் சம்பளமாக அமெரிக்க டாலர் 2,500-3,000 க்கும் மேல் பெறலாம். கூடுதலாக, அமெரிக்கா, கனடா, பிரிட்டன், ஆஸ்திரேலியா உள்ளிட்ட வெளி நாடுகளிலும் அல்லது இலங்கையிலும் மருத்துவராக பணிபுரியலாம்

ஹோமாகம கொடகமவில் உள்ள குயின்ஸ் இன்டர்நேஷனல் பிஸ்னஸ் கம்பஸ் QIB Campus இதுவரை, 3000 க்கும் மேற்பட்ட மாணவர்களது வெளிநாட்டு பட்டப்படிப்புகள் மற்றும் வேலை கனவுகளை நனவாக்க உதவியுள்ளனர்.

பலதுறைகளில் டிப்ளோமா படிப்புகளைப் படிக்கவும், இந்த நாட்டில் அல்லது சிங்கப்பூரில் இளங்கலைப் படிப்புகளின் முதல் மற்றும் இரண்டாம் ஆண்டுகளைப் படிக்கவும், சிங்கப்பூர், இங்கிலாந்து, கனடா அல்லது ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் இறுதி ஆண்டை முடிக்கவும் QIB Campus வழிகாட்டுதலின் கீழ் முடியும். மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்த இலவச ஆங்கில பாடங்களை நடத்துவதில் QIB Campus நிபுணத்துவம் பெற்றுள்ளது.

## சரிபார்த்தல்...





“அஸ்வெசும” நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு வழங்கும் திட்டத்தில் மேன்முறையீடு செய்தவர்களின் தகவல்களை சரிபார்க்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- ஏ.எல்.எம்.ஷினாஸ்








## இலவச கண் பரிசோதனை

மட்டக்களப்பு-கிரான் புலிபாய்ந்தகல் பிரதேசத்தில் பிரதேச மக்களின் நன்மை கருதி இலவச கண் பரிசோதனையும் மூக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. 232ஆவது காலால் படை பிரிகேட்டினால் இந்நிகழ்வு புலிபாய்ந்தகல் மருத்துவ சிகிச்சை பிரிவு சுகாதார வைத்தியர் அதிகாரி அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

- எம் எஸ் எம் நூர்தீன்

## நயினாதீவில்...





வரலாற்று சிறப்புமிக்க நயினாதீவு ராஜமஹா விகாரையில் கண்டி பெரஹரா ஊர்வலம் மிக சிறப்பாக செவ்வாய்க்கிழமை (31) இடம்பெற்றது.

இந்த கண்டிப் பெரஹரா ஊர்வலமானது நயினாதீவு அம்மன் ஆலய பின்புற வீதியில் இருந்து ஆரம்பமாகி அங்கிருந்து நயினாதீவு ராஜமஹா விகாரைவரை சென்றது.

பு.கஜிந்தன்





## விதை குண்டுவீச்சு...

அனுராதபுரத்திலுள்ள லபுகஸ்தமன அரச வன ஒதுக்கீட்டில் எட்டாவது அலை விதை குண்டு வீசுதல் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் ஸ்ரீலங்கா எயார் ஹோல்டிங்ஸின் தாராளமான அனுசரணையுடன் 30 மற்றும் 31ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்பட்டது.


## தேசிய விளையாட்டு விழா

கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய விளையாட்டு விழா சுகததாச விளையாட்டு அரங்கில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரும், அதிதியாக அமைச்சின் செயலாளர் நிகல் ரணசிங்கவும் கலந்து கொண்டனர்.







## ஈ.கல்வி அங்குரார்ப்பணம்

ஈ.கல்வி அமைப்பின் செயற்பாடுகள் பட்டிருப்பு வலயத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

பட்டிருப்பு வலயக்கல்வி பணிமனைக்கு e- kalvi Charity Fund Inc அமைப்பின் செயலாளர் இளங்கோ வினாசித்தம்பி விஜயமொன்றை திங்கட்கிழமை (30) மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது பட்டிருப்பு வலயக்கல்வி பணிமனையை மையமாகக் கொண்டு இயங்கும் e- kalvi யின் zoom வகுப்புகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளார்.

- வி.ரி. சகாதேவராஜா



# பட்டாசு கட்டுப்பாடு




தீபாவளி பண்டிகை எதிர்வரும் 12ஆம் திகதி இந்தியா முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட இருக்கிறது. தீபாவளி பண்டிகை அன்று, பட்டாசு வெடித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார்கள். ஆனால், பட்டாசு வெடிப்பதால் காற்று மாசு அதிக அளவில் ஏற்படுவதாக, இந்தியாவில் வழக்கு தொடரப்பட்டது.

இதனை விசாரித்த நீதிமன்றம், இரண்டு மணி நேரம் மட்டுமே பட்டாசு வெடிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது. அதனடிப்படையில், தமிழகத்தில் காலை 6 மணி முதல் 7 மணி வரையும் இரவு 7 மணி முதல் 8 மணி வரையும் பட்டாசு வெடிக்கலாம்.

தமிழகம்

## மஞ்சாவுக்கு தடை

வனம், வன விலங்குகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு மாநில அரசுக்கு அரசியல் சாசனம் வழிவகைகளை செய்தளித்துள்ளது. பட்டங்கள் பறக்கவிடப்பட்டபோது பசையுடன் கண்ணாடித் துகள் தடவப்பட்ட மாஞ்சா நூலைப் பயன்படுத்தியதால் மக்கள் காயமடைந்துள்ளனர், பறவைகளும் காயமடைந்துள்ளன. அதுமட்டுமல்லாமல் சில இடங்களில் மக்களும், மிருகங்கள், பறவைகள் இறக்க நேரிட்டன

அவை மக்கிப்போகாமல் நிலம், ஆறு, குளம் போன்ற இடங்களில் ஆங்காங்கு கிடப்பதால், அதில் சிக்கிக்கொள்ளும் உயிரினங்கள் அதை உண்பதால் பலவித சிரமங்களுக்கு ஆளாகியும் இறந்துவிடுகின்றன

எனவே, மாஞ்சா நூல் உட்பட மக்கிப்போகாத தன்மையுள்ள, பட்டம் பறக்கப் பயன்படுத்தப்படும் நைலோன் நூல், பிளாஸ்டிக் நூல், செயற்கை இழையால் செய்யப்பட்ட நூல்கள் ஆகியவற்றைத் தயாரிப்பது, விற்பது, சேமித்து வைப்பது, கொள்முதல் செய்வது, இறக்குமதி செய்வது என அனைத்து நடவடிக்கைகளுக்குத் தமிழகம் முழுவதும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சென்னை

## உயர் நீதிமன்றத்தில் முருகன் மனு



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையாகி திருச்சி சிறப்பு முகாமில் உள்ள முருகன் உயர்நீதிமன்றத்தில் மனு அளித்துள்ளார்.

முருகனின் மகள் இங்கிலாந்தின் தலைநகரமான லண்டனில் வசிக்கிறார். இந்நிலையில் மகளுடன் சேர்ந்து வாழ லண்டன் செல்வதற்கான விசா பெறுவதற்கு அடையாள அட்டை தேவைப்படுவதால் அதற்கு விண்ணப்பிக்க ஏதுவாக புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையை வழங்க மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு உத்தரவிட வேண்டும் என்ற கோரிக்கையுடன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

# தாய்லாந்து செல்ல விசா தேவையில்லை

உலகம் முழுவதிலும் உள்ள சுற்றுலா பயணிகள் தாய்லந்திற்கு வந்து செல்கின்றனர். வெளிநாடுகளிலிருந்து அதிக சுற்றுலா பயணிகளை கவருவதற்காக முயற்ச்சியாக இந்தியா மற்றும் தாவான் குடிமக்களுக்கு விசா சேவையை தாய்லாந்து அரசு அறிவித்துள்ளது.

அதன்படி, இந்தியர்கள் விசா பெறாமலே 30 நாட்கள் வரை தாய்லந்தில் தங்கலாம் எனவும் 2023 நவம்பர் 10 முதல் 2024 மே 10ஆம் வரை இந்த விசா சலுகை நடைமுறையில் இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது,.




பொலிவியா

# தூதரக தொடர்பை துண்டித்த பொலிவியா



இஸ்ரேலுடனான தூதரக தொடர்பை துண்டித்து கொள்வதாக பொலிவியா நாடு அறிவித்துள்ளது. இது தொடர்பாக பொலிவியன் தகவல் முகமை கூறும்போது, பலஸ்தீன மக்களுக்கு எதிரான மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை இஸ்ரேல் நடத்தி வருகிறது. இதனால் இஸ்ரேலுடனான தூதரக உறவுகளை பொலிவியா துண்டித்து, காசாவுக்கு பொலிவியாவும் மனிதாபிமான உதவிகளை அனுப்ப தயாராகி வருகிறது என்று தெரிவித்துள்ளது.

மேலும் ஐ.நா.வுக்கான பொலிவியா பிரதிநிதி டியாகோபாரி, ஐ.நா. சபையில் பேசும்போது, "பொலிவியா மக்களும், அரசாங்கமும் இஸ்ரேல் அரசுடன் தூதரக உறவுகளை முறித்து கொள்ள முடிவெடுத்துள்ளனர். மக்களின் வாழ்க்கை, சர்வதேச சட்டம் அல்லது சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மதிக்காத அரசாக இஸ்ரேலை நாங்கள் கருதுகிறோம்" என்றார்.

இதற்கிடையே கொலம்பியா, சிலி ஆகிய நாடுகள் தங்களது இஸ்ரேலுக்கான தூதர்களை ஆலோசனைக்காக திரும்ப அழைத்துள்ளன.

இதுதொடர்பாக சிலி வெளியுறவு அமைச்சகம் கூறும்போது "காசா பகுதியில் இஸ்ரேல் மேற்கொண்டுள்ள சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் ஏற்றுக்கொள்ள முடியாத மீறல்களைக் கருத்தில் கொண்டு, இஸ்ரேலுக்கான சிலி தூதர் ஜார்ஜ் கர்வாஜலை சாண்டியாகோவிற்கு திரும்ப அழைக்க சிலி அரசு முடிவு செய்துள்ளது" என்று தெரிவித்துள்ளது.

### ஹமாஸ் போரில் – இஸ்ரேல்


## 31 பத்திரிகையாளர்கள் உயிரிழப்பு




ஹமாஸ் - இஸ்ரேல் இடையிலான போர் 20 நாட்களைக் கடந்துவிட்ட நிலையில், அங்கு மனிதாபிமான அடிப்படையில் உடனடியாக போர் நிறுத்தத்தைக் கொண்டுவரக் கோரி ஜோர்டான் அரசு, ஐ.நா. பொதுச் சபையில் வரைவுத் தீர்மானம் கொண்டுவந்தது. ஆனால், இன்னும் போர் நிறுத்தம் குறித்த எந்த ஒரு முடிவும் தெரியவில்லை. செய்தி சேகரிக்க சென்ற பத்திரிகையாளர்கள் முதல் அப்பாவி குழந்தைகள் வரை இந்தக் கொடூரத் தாக்குதலில் பலியாகி வருகின்றனர்.

ஒக்டோபர் 7ஆம் திகதி ஹமாஸ் -இஸ்ரேல் போர் தொடங்கியதில் இருந்து இதுவரை 31 பத்திரிகையாளர்கள் உயிரிழந்துள்ளனர் என 'தி டைம்ஸ் ஆப் இஸ்ரேல்' என்ற ஒன்லைன் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளது. இதை பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு (The Committee to Protect Journalists) உறுதி செய்துள்ளது.

## இராஜினாமா



இஸ்ரேல் நாட்டின் மீது ஹமாஸ் அமைப்பு கடந்த 7ஆம் திகதி, ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரொக்கெட் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் இராணுவம் காசா பகுதிக்குள் அதிரடியாக நுழைந்து ஹமாஸ் அமைப்பின் இலக்குகள் மீது தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், இஸ்ரேல் -ஹமாஸ் மோதல் விவகாரம் தொடர்பாக நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர் அலுவலகத்தின் இயக்குநர் கிரேக் மொகிபேர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.




# உலகக் கிண்ணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட பங்களாதேஷ்

இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரிலிருந்து பங்களாதேஷ் வெளியேற்றப்பட்டுள்ளது.

கொல்கத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாகிஸ்தானுடனான போட்டியில் தோற்றதைத் தொடர்ந்தே உலகக் கிண்ணத்திலிருந்து பங்களாதேஷ் வெளியேற்றப்பட்டுள்ளது.

ஏழு போட்டிகளில் விளையாடி ஒரேயொரு போட்டியில் வென்று இரண்டு புள்ளிகளை மாத்திரமே பங்களாதேஷ் பெற்றுள்ள நிலையில், அடுத்த இரண்டு போட்டிகளில் வென்றால் கூட பட்டியலில் ஐந்தாமிடத்துக்கே அதிகபட்சமாக அவ்வணி முன்னேற முடியும் என்ற நிலையிலேயே அரையிறுதிப் போட்டிகளுக்கு தகுதி பெறும் வாய்ப்பை அவ்வணி இழந்துள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

பங்களாதேஷ்: 204/10 (45.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: மகமதுல்லா 56 (70), லிட்டன் தாஸ் 45 (64), ஷகிப் அல் ஹஸன் 43 (64), மெஹிடி ஹஸன் மிராஸ் 25 (30) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷகீன் ஷா அஃப்ரிடி 3/23, மொஹமட் வாஸிம் 3/31, ஹரிஸ் றாஃப் 2/36, இஃப்திஹார் அஹ்மட் 1/44, உஸாமா மிர் 1/66)

பாகிஸ்தான்: 205/3 (32.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: பக்கர் ஸமன் 81 (74), அப்துல்லாஹ் ஷஃபிக் 68 (69), மொஹமட் றிஸ்வான் ஆ.இ 26 (21), இஃப்திஹார் அஹ்மட் ஆ.இ 17 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: மெஹிடி ஹஸன் மிராஸ் 3/60)

போட்டியின் நாயகன்: பக்கர் ஸமன்

இந்நிலையில், மும்பையில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் இந்தியாவை இலங்கை எதிர்கொள்கிறது.



### மர்ஹூம் அப்துல் ஜவாத் ஞாபகார்த்த கிரிக்கெட் தொடர்:

## இறுதிப் போட்டியில் சாய்ந்தமருது ஓ.ஜீ விளையாட்டுக் கழகம்

■ அஸ்ஹர் இப்றாஹீம்

காத்தான்குடி விளையாட்டுக் கழகம் நடத்தும் மர்ஹூம் அப்துல் ஜவாத் ஞாபகார்த்த கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு சாய்ந்தமருது ஓ.ஜீ விளையாட்டுக் கழகம் தகுதி பெற்றுள்ளது.

காத்தான்குடி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் மட்டக்களப்பு சென்றல் லைட் விளையாட்டுக் கழகத்தை வென்றே இறுதிப் போட்டிக்கு ஓ.ஜீ தகுதி பெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஓ.ஜீ 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 130 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சென்றல் லைட் 7.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 40 ஓட்டங்களை பெற்ற நிலையில் மழை குறுக்கிட்டதால் மத்தியஸ்தர்களின் தீர்ப்பீன் படி டக்வேர்த் லூயிஸ் ஸ்டேர்ண் முறையில் ஓ.ஜீ 13 ஓட்டங்களால் வெற்றியீட்டியதாக அறிவிக்கப்பட்டது.



## தேசியத்தில் தங்கம் வென்ற பகிர்ஜன் கௌரவிப்பு

■ எம்.எஸ்.எம். நூர்தீன்

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட பட்டிருப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட களுதாவளை மத்திய மகா வித்தியாலய தேசிய பாடசாலை மாணவன் குகதாஸ் பகிர்ஜன் 14 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் கலந்து கொண்டு 1.69 மீற்றர் பாய்ந்து முதலிடம் பெற்று தங்க பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

இவர் கொழும்பிலிருந்து சொந்த ஊரான களுதாவளைக்கு வருகை தந்தவேளை பாடசாலை சமூகத்தினரால் அமோக வரவேற்பளிக்கப்பட்டு, கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது

பிரதான வீதி வழியாக சாதனை மாணவன் ஊர்வலமாகவும் அழைத்துச் செல்லப்பட்டு, பொன்னாடை போர்த்தி மலர் மாலை அணிவித்து பான்ட் வாத்திய இசை முழங்க குறித்த மாணவர் மற்றும் குறித்த பாடசாலையில் இருந்து தேசிய மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட ஏனைய விளையாட்டுக்களில் பங்குபற்றிய மாணவர்கள் பாடசாலை வளாகத்தினுள் அழைத்து வரப்பட்டு கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

### அமரர் ச.சந்திரகாந்தன் ஞாபகார்த்த தொடர்:

## வெற்றிவாகை சூடிய மயிலங்காடு ஞானமுருகன் அகடமி அணி

■ பு. கஜிந்தன்

அமரர் ச.சந்திரகாந்தனின் நண்பர்களின் நிதி அனுசரணையில் யாழ்ப்பாணம்-தெல்லிப்பளை கிறாஸ்கொப்பர்ஸ் கிட்ஸ் அகடமியால் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் மயிலங்காடு ஞானமுருகன் அகடமி அணி வெற்றிவாகை சூடியது.

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற வட மாகாணத்தில் எட்டு வயதுக்குட்பட்டவர்களுக்காக நடாத்தப்பட்ட முதலாவதான இத்தொடரில் மருதனார்மடம் நொதேர்ண் ஸ்போட்ஸ் கொலிஜ் அணியை 4-2 என்ற கோல் கணக்கில் வென்றே ஞானமுருகன் அகடமி வெற்றிவாகை சூடியது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 02 நவம்பர் 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.